## தலைப்பு 264 - யாழ்ப்பாண மாவட்டச் செயலகம்

-----------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 1.1 முனைப்பழியான அபிப்பிராயம்

---------------------

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கை 2019 மே27 இல் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு வழங்கப்பட்டிருந்தது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 28 இல் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---------------------------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------
-

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான எதாயினும் மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளககட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்குகாரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளககட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்கு உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளக்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆயினும் இவை மாவட்ட செயலகத்தின் வினைத்திறமையான உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிரயாயத்தினை தெரிவிப்பதற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புமற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

கணக்காய்வின் போது அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட அந்தக் கட்டுப்பாட்டின் குறைபாடு உட்பட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்காய்வு உத்தியோகத்தருக்கு நான் தெரியப்படுத்தியிருந்தேன்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் தொகைகளுடன் ஒப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனினும் கணக்காய்வுக்கு முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் உரியமுறையில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே முன்னைய ஆண்டிற்குரிய தொகைகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதுள்ளன.

(ஆ) மாவட்ட செயலகததினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான இணங்குதல்கள் மாவட்ட செயலத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) காசுப்பாய்ச்சல் கூற்று**

மாவட்ட செயலகத்திற்குரிய வருமானங்களை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள குறைபாடு அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மாவட்டச் செயலக நடைமுறையல்லாச் சொத்துக்களின் விற்பனை மூலம் பெறப்பட்ட ரூபா 794,096 தொகையானது காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுபாய்ச்சலின் கீழ் | நடைமுறையல்லாச் சொத்துக்களின் விற்பனை வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் கணக்கீட்டு கொள்கைக்கு அமைய சரியாக காண்பிக்கப்பட வேண்டும் | திறைசேரியால் முறையான வழிகாட்டல்கள் எமக்கு வழங்கப்படுமிடத்து தங்களின் ஆலோசனைகளையும் கருத்திற்கொண்டு எதிர் காலத்தில் எம்மால் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என கருதுகிறோம். |

வெளிகாட்டுவதற்கு பதிலாக தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

**(ஆ) மீண்டெழும் செலவினங்கள்**

நிதிக்கூற்றுக்களுக்குரிய மீண்டெழும் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீண்டெழும் செலவினங்களில் கருத்திட்டங்கள் இரண்டாக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் இரண்டு கருத்திட்டங்களினதும் மொத்தச் செலவினமாக செலவுவிடய ரீதியாக காண்பிக்கப்பட்டுள்ளமையால் திறைசேரியின் கணனி அச்சுப் பிரதியுடன் ஒப்பிட்டு செவ்வைபார்க்க முடியாதுள்ளது. | கருத்திட்டங்கள் இரண்டாக இருப்பதால் செலவின விபரம் கருத்திட்ட வாரியாக வேறுவேறாகக் காண்பிக்கப்பட வேண்டும் | எதிர்காலத்தில் திறைசேரி மேற்படி கருத்திட்டத்தின் அடிப்படையில் கணக்கறிக்கைகளைச் செய்து வழங்குமாறு கோரும் பட்சத்தில் தரப்பட்ட மாதிரியின் அடிப்படையில் எம்மால் கணக்கறிக்கைகள் வழங்கப்படும் என தயவுடன் தெரியப்படுத்துகிறோம். |

**(இ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| (i) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் 31 திசெம்பர் 2018 இல் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாகவிருந்த சேவை வறிதாக்கப்பட்ட, ஓய்வுபெற்ற மற்றும் மேலும் அமைச்சுக்கள், திணைக்களங்களுக்கு சென்ற அலுவலர்களின் கூட்டுமொத்தம் ரூபா 1.87 மில்லியன் பெறுமதியானவற்றை அறவிடுவதற்கு தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4 இன் பிரகாரம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மாவட்ட செயலகங்களிடையே இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை பின்பற்றி, உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் சென்று 03 மாதங்களினுள் தீர்க்கப்பட வேண்டும். அவ்வாறே மாகாண சபைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் நிலுவை கடன் மீதிகள் அந்த சுற்றறிக்கையின் 3 ஆம் பந்திக்கமைய தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு தீர்ப்பனவு செய்யப்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக்கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளுக்கமைய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டு உள்ளமையால், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கடன் தொகையொன்றினை மீள செலுத்தி முடிப்பதற்கு முன்னர் ஓய்வு பெற்றுச் செல்லும் அல்லது, மரணமடையும் அல்லது சேவை நிறைவடையும் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றிற்கு விடுவிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவரின் கடன் மீதியில் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும் | ஓய்வு பெற்ற உத்தியோகத்தரிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய தொகைகள் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து சீர் செய்வதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றதும் சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.<br><br>ஏனைய திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தரின் நிலுவை பற்றிய கோரிக்கை மேற்படி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டு சீர்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய முற்பணம் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>மாகாண சபைக்கு இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்கள் தொடர்பான நிலுவைகள் தொடர்பில் 201250 குறித்த அமைச்சால் சீர்செய்யப்பட்டுள்ளது. தொகையை குறித்த அமைச்சில் நிதியேற்பாடு இல்லாததன் காரணமாக சமனான தொகைளமக்கு மாதாந்தம் செலுத்தப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கூட்டு மொத்தம் ரூபா 894,360 பெறுமதியான இடர்கடன்கள் முறையான கடன் பிணையாளிகள் இல்லாமல் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. | கடன்களுக்குரிய பிணையாளிகளினை தாபன விதிக்கோவையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட வேண்டும். | பிணையாளிகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஈ) ஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

----------------------------------------------------------------------

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை கணக்கீடு செய்யும் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வலிகாமம் மேற்கு மற்றும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான காணிகளின் பெறுமதி முறையே ரூபா 3.5 மில்லியன், ரூபா 35 மில்லியன் என பெறுமதி மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 38.5 மில்லியன் பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | மதிப்பீடு செய்யப்பட்ட காணிகளின் பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நில மதிப்பீட்டுப் பெறுமதி தொடர்பான கடிதம் ஆண்டுக்கான கணக்கறிக்கைகள் மூடிய திகதியான 31.12.2018 இற்குப் பின்பே கிடைக்கப்பெற்றதால் 2018ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் உள்ளடக்க முடியாமல் போய்விட்டது. |
| (ii) | காரைநகர் பிரதேச செயலகத்தின் காணி தனியாருக்குச் சொந்தமானதாக இருந்த போதிலும் அதன் பெறுமதி ரூபா 2 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களில் காட்டப்பட்டுள்ளதுடன் இக்காணியில் அலுவலககட்டடமானது ரூபா 58.144 மில்லியன் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் காணியின் உரிமைத்துவத்தினை பெற்றுக்கொள்வதற்கு 30 ஏப்ரல் 2019 வரை நடவடிக்கை | காணியின் உரிமையினை காரைநகர் பிரதேச செயலகத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் | விலை மதிப்பீட்டுத் திணைகளத்தின் JN/LE/248 இலக்க 17.07.2012 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் மேற்படி காணியானது ரூபா2 மில்லியன் பெறுமதியானது என மதிப்பிடப்பட்டதுடன் மேற்படி தொகையை அலுவலக நோக்கங் கருதி பயன்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி தொகையானது 2018 கணக்கிற்குள் உள்வாங்கப்பட்டிருந்தது.<br><br>காணியின் உரிமையாளரினை |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | அடையாளங் காண முடியாதுள்ளது. அதன் பிரகாரம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்கு மேற்படி உரிமை கோரப்படாத காணியை சுவீகரிக்கும் நோக்கத்திற்காக கோரிக்கைக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

**(உ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

யாழ் மாவட்ட செயலகத்தில் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. விபரம் வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) **மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 454(2) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரசாங்க கட்டிடங்களிலுள்ள அனைத்து மின்சார உபகரணங்கள் தொடர்பான பொருட் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | இவற்றை இற்றைப்படுத்திய முறையில் பேணுவது தொடர்பில் எம்மால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ii) **வாகன நிரற் படுத்தும் பதிவேடு** | | |
| நிதிப் பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று பேணப்படவேண்டும். | தங்களால் குறிப்பிடப்பட்ட பதிவேடு இற்றைப்படுத்தப்பட்ட முறையில் பதியப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## (ஊ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | | | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** | | |
| | **ரூபா** | | | |
| இலங்கை சனநாயகசோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணங்கள் | | | | |
| நிதிப் பிரமாணம் 371(2) | 3,670,317 | மாவட்டச் செயலகம், வலிகாமம் வடக்கு மற்றும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகங்களில் பொருட்கள் சேவைகள் கிடைப்பனவிற்கு முன்பாக அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு கட்டுநிதி முற்பணம் வழங்கப்பட்டிருந்தது | பெறுகை நடைமுறையானது பின்பற்றப்பட வேண்டும் | அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் கேள்வி நடைமுறையைப் பின்பற்றி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வண்ணம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| நிதிப் பிரமாணம் 571 | 4,352,478 | இரண்டு வருடங்கள் கடந்த நிலையில் 04 பிடிபண வைப்புகக்ள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 571 இற்கு அமைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | Fine Aluminum PVT Ltd இன் பிடிபணமான ருபா 21,371.00 11.04.2019 அன்று சீர்செய்யப்பட்டது. SSR Construction இன் பிடிபணமான ரூபா 4,331,107 பொது வைப்புக்கணக்கில் வைக்கப்பட்டது. நிறுத்தி வைக்கப்பட்ட செயற்றிட்டமானது தற்போது மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| நிதிப் பிரமாணம 137, 138 | 146,861 | பொருட்கள் சேவைகள் பெற்றுக் கொள்ள முன்னர் 2018 ஆம் ஆண்டு 148 எண்ணிக்கையான காசோலைகள் வரையப்பட்டு மாவட்டச் செயலகம் மற்றும் 15 பிரதேச செயலகங்களில் பாதுகாப்பில் வைத்திருக்கப்பட்டிருந்தன.<br><br>இக்காசோலைகள் 31 மார்ச் 2019 வரை பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படாத மாற்றப்படாத காசோலை பட்டியலில் காணப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம 137,138 இன் பிரகாரம் பொருட்கள் சேவைகள் பெறப்பட்ட பின்பே காசோலைகள் வரையப்பட வேண்டும் | பொருட்கள் சேவைகளை விரைவில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| நிதிப்பிரமாணம் 113 | 2,403,000 | 17 ஆண்டுகள் தொடக்கம் 31 ஆண்டுகள் வரையான வீச்சிலான காலப்பகுதியில் இருந்து பல்வேறு காரணங்களால் ரூபா 2.403 மில்லியன் கூட்டுத்தொகையான நட்டங்கள் நிதிப்பிரமாணம் 113 இற்கு அமைவாக கணக்குகளில் திருத்தம் செய்யப்பட்டு தெளிவுபடுத்துவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணம் 113 இற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நட்டத்தொகை ரூபா 16,016,958.75 மற்றும் பிரதேச செயலகம் சங்கானை ரூபா 459,850 ஆகியவற்றைப் பதிவழிப்பு செய்வதற்கான அனுமதி அமைச்சிலிருந்து கிடைக்கப் பெறவில்லை |

**(எ) மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட மோசடித்தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | -------------------------------------- | --------------- | --------------------------- |
| (i) | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வலிகாமம் தென்மேற்கு பிரதேசசெயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட மானிப்பாய் சந்தைகடைத்தொகுதி வேலைக்கான கொடுப்பனவிலிருந்து ஒப்பந்தகாரரால் பெறுகை நடைமுறையில் இணங்கிக் கொள்ளப்பட்ட கழிவு உரிய விகிதாசாரப்படி அறவிடப்பட்டிராமையால் ரூபா.348,998 மேலதிககொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | குறித்த மேலதிகக் கொடுப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிறைவேற்றிய ஒப்பந்தகாரரிடமிருந்து மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ii) | தீவகம் தெற்கு பிரதேச செயலகத்தின் பயனாளிகள் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை உண்மைக்கு புறம்பாக அதிகரித்து காட்டப்பட்டமையால் ரூபா 66,000 பெறுமதியான உலர் உணவுப் பொதி மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தன. | இது தொடர்பில் முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட அலுவலர்கட்கு எதிராக தாபனவிதிக் கோவை XLVII ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | நிவாரணம் வழங்கலின் போது அங்கத்தவர் தொகைகளில் சிறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. எனினும் குறிப்பிடப்பட்ட குடும்பங்களுக்கே நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. |
| (iii) | துரித கிராம அபிவிருத்தித்திட்டத்தின் (கம்பெரலியா) கீழ் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவில் சாளம்பை வியாபாரி மூலை வீதி புனரமைப்பிற்காக தொழில்நுட்ப அலுவலரால் மதிப்பிடப்பட்டதை விட 03 மூலப்பொருட்களில் உண்மையாக வழங்கல் செய்யப்பட்ட மூலப்பொருட்கள் குறைவாக இருந்தமையால் | இது தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு மேலதிக கொடுப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | பதில் வழங்கப்படவில்லை |

கூட்டுமொத்தம் ரூபா 115,169 மேலதிகமாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தலைப்பு 120 இல் மீண்டெழும் செலவினத்தில் ரூபா 11.46 மில்லியன் பெறுமதியான செயற்திட்ட வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் திறைசேரியிடமிருந்து மீளாய்வாண்டிற்கான கட்டுநிதி கிடைக்கப் பெறாமையால் அவற்றிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | கட்டுநிதிகளை உரிய காலத்தில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சுனவரி 2019 இல் இவை முழுமையாக சீர்செய்யப்பட்டது. |
| (ஆ) | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் மூலதனச் செலவினத்தில் 12 சந்தர்ப்பங்களில் 10 செலவினத் தலைப்புக்களின் கீழ் கூட்டுமொத்தம் ரூபா 636.80 மில்லியன் பெறுமதியான செயற்திட்ட வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் திறைசேரியிடமிருந்து மீளாய்வாண்டிற்கான கட்டுநிதி கிடைக்கப்பெறாமையால் அவற்றிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. | செலவினங்களை மேற்கொள்வதற்கு முன் கட்டுநிதிகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எமது கோரிக்கைக்குக் குறைவான தொகையே திறைசேரியால் விடுவிக்கப்பட்ட படியால் 2018 வருட இறுதிப் பகுதியில் பொருள், சேவை, வேலை என்பன நிறைவுற்றும் வழங்குனர்களுக்கும் ஒப்பந்தகாரருக்கும் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. |

**2.2 செலவின முகாமைத்துவம்**

**--------------------------------------------**

வருடாந்த பாதீட்டு மதிப்பீடு தயாரித்தல், நிதி ஏற்பாடு மாற்றல், குறைநிரப்பு பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பயன்படுத்துதல், சேமிப்புக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------ | ---------------- | ------------------------------------------ |
| (அ) | மீண்டெழும் செலவினங்களின் மூல ஒதுக்கீட்டில் 12 செலவு விடயங்களில் 07 தொடக்கம் 54 வீதம் என்ற வீச்சிலான சேமிப்புக்கள் கூட்டுமொத்தம் ரூபா 17.22 மில்லியன் காணப்பட்டிருந்தன. | பாதீட்டினை முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர் வருங்காலங்களில் இவ்வாறான பாரிய வீச்சிலான மாறுதல்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | மீண்டெழும் செலவினங்களின் 12 செலவின விடயங்களில் 05 தொடக்கம் 2333 வீதம் என்ற வீச்சிலான அதே கூட்டுமொத்தம் ரூபா 17.22 மில்லியன் தொகையால் அதிகரிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இது மீண்டெழும் செலவினத்திற்கான மதிப்பீடு முறையான திட்டமிடலின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டுகின்றது | பாதீட்டினை முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். | பாதீட்டின் அடிப்படையில் எழுந்த நியாயமான சேமிப்புக்கள் மீது பற்றாக்குறையான செலவுத் தலைப்புக்களுக்கு மாற்றுவதற்காக கணக்கீட்டு உத்தியோகத்தரால் பிரதான கணக்கீடு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்ட விளக்கவுரைகள் ஏற்றுக்கொண்டதன் அடிப்படையிலேயே பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராலும் திறைசேரியாலும் நிதி ஒழுங்குவிதி 66(1) வகைமாற்ற நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டது என்பது குறிப்பிடப்படுகின்றது. |
| (இ) | மீண்டெழும் செலவினங்களின் மூல ஒதுக்கீடுகளின் 11 செலவின விடயங்களில் 07 தொடக்கம் 54 வீதம் என்ற வீச்சிலான சேமிப்புக்கள் ஏற்பட்டு வகைமாற்றம் | தேவையான நிதியினையே வகைமாற்றம் செய்யப்பட வேண்டும். | எதிர் வருங்காலங்களில் இவ்வாறான பாரிய வீச்சிலான மாறுதல்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்படும். |

செய்யப்பட்டமைக்கான திருப்திகரமான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

**2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டின் பயன்பாடு**

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பல்வேறு பணிகளுக்காக 48 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் ரூபா 4,956.54 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதியேற்பாட்டில் ரூபா 4,253.08 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ரூபா 703.46 மில்லியன் பெறுமதியான 14 வீதமான தொகை மீளாய்வாண்டில் பயன்படுத்தப்படாமல் இருந்துள்ளது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் NDRSC/2018/03III ஆம் இலக்க 19 ஒக்டோபர் 2018 ஆம் திகதிய சுற்றுநிருபத்தின் 10 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கத்தவர் எண்ணிக்கைக்கு அமைவாக வரட்சி நிவாரணம் வழங்கப்பட்டிருக்காமையினால் 1033 எண்ணிக்கையான பயனாளிகள் குடும்பங்களிற்கு ரூபா 1000 வீதம் கூட்டுமொத்தம் ரூபா 1,033,000 பெறுமதியான உலர் உணவுப்பொதி குறைவாக தீவகம் தெற்கு, தீவகம் வடக்கு, வலிகாமம் தெற்குமேற்கு, வடமராட்சி வடக்கு பிரதேசசெயலக பயனாளிகளிற்கு வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. | சுற்று நிருபத்தின் பிரகாரம் செயற்படுவதை பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தல் வேண்டும். | சுற்றறிக்கையின் மொழிபெயர்ப்பில் ஏற்பட்ட தவறினால் குறைவாக வழங்கப்படடுள்ளது. இத்தவறுகள் எதிர்காலத்தில் எழாதவாறு எம்மால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்களுக்குத் தயவுடன் அறியத்தருகிறோம். |
| (ஆ) | வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திடடத்தின் (ONUR) தையல் மற்றும் பனைசார் கைவினைப் பொருட்கள் பயிற்சி நிலையம் | மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு 13A Plug Point இனை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தற்போது அவற்றை மாற்றிப் பூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| | அமைப்பதற்காக ரூபா 4.25 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. அதில் தையல் இயந்திரங்களுக்கு மின்வழங்கலுக்காக 13A Plug Point இற்குப் பதிலாக15A Plug Point பொருத்தப்பட்டமையால் தையல் இயந்திரங்களை இயங்க வைக்க முடியாதநிலை காணப்படுகின்றது. | | |
| (இ) | அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வரட்சி கால குடிநீர் விநியோகத்திற்காக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட உழவு இயந்திர தண்ணீர் தாங்கி கடந்த 18 மாதங்களாக உாயி தேவைக்குப் பயன்படுத்தப்படாதுள்ளது. (RY-1532) (WPRE -1083) | வரட்சியால் பாதிக்கப்படும் மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு குறித்த தண்ணீர் தாங்கியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பிரதேச சபையானது தன்னிடம் உடமைமாற்றம் செய்து கையளித்தால் பயன்படுத்த முடியும் என குறிப்பிட்டுள்ளது. |
| (ஈ) | தீவகம் தெற்கு பிரதேச செயலகத்தின் 2017, 2018 ஆம் ஆண்டுகளில் கட்டாக்காலி மாடுகளை பிடிப்பதற்கும் அவற்றைக் கொண்டு செல்வதற்கும் இரண்டு சில்லு உழவு இயந்திரம் பாரவூர்தி செலவினமாக ரூபா 2,243,800 மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>இச் செலவினத்திற்கான மாடு பிடித்தவர் பெயர் விபரம், கொடுப்பனவுச்சான்று, இரு சக்கர உழவு இயந்திர, பாரவூர்தி பதிவிலக்கங்கள், ஏற்றிய இறக்கிய திகதி, விலங்குணவு கொள்வனவு சிட்டைகள் போன்ற சான்றாதாரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாமையால் அக் கொடுப்பனவுகளை கணக்காய்வில் ஏற்று உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | இச்செலவினம் தொடர்பான அனைத்து சான்றாதாரங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | தங்களால் கோரப்பட்ட விபரங்கள் அனைத்தும் கமக்காரர் அமைப்பினால் நேர்த்தியான முறையில் கோவைப்படுத்தப்படாமையால் கணக்காய்வின் போது சமர்ப்பிக்க முடியாத நிலை காணப்பட்டது. |

## 2.4 முற்பண கொடுப்பனவும் தீர்ப்பனவும்

முற்பண கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு

அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மாவட்டச் செயலகத்தினால் 05 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட முற்பணங்கள் கூட்டுமொத்தம் ரூபா149,500 01 மாதம் தொடக்கம் 04 மாதங்கள் வரையான காலதாமத்தின் பின்னர் தீர்வு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணம் 371(2) இன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களை 30 நாட்களுக்குள் சீர் செய்யுமாறு அனைத்து பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும், எமது கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ள விடயங்களினால் ஏற்படும் தாமதங்கள் இனி வருங்காலங்களில் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 2.5 வைப்பு மீதிகள்

வைப்பு மீதிகள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மூன்றாம் தரப்பினருக்கு மீளளிக்கப்பட வேண்டிய தற்காலிக வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா1.09 மில்லியன் 06 மாதங்களுக்கு மேலாக உரிய நபர்களுக்கு வழங்கப்படாமல் வைப்புக்கணக்கில் இடப்பட்டுள்ளது. | குறித்த தற்காலிக வைப்புப்பணம் உரிய நபர்களுக்கு மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் | தற்போது அவை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| (ஆ) | செலவின மீளளிப்பாக பெறப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 25.28 மில்லியன் 06 மாதங்களுக்கு மேலாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது வைப்புக் கணக்கில் இடப்பட்டுள்ளது. | குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது அவை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | வடமாகாண சபைக்குரிய 31 திசெம்பர் 2018 இல் உள்ளவாறான வருமான மீதிகள் கூட்டுமொத்தம் ரூபா 2.47 மில்லியன் உரிய | வடமாகாணத்திற்குரிய வருமானங்கள் உரிய காலத்தில் உரிய திணைக்களங்களுக்கு அனுப்பப்படுவதற்கு | தற்போது அவை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| அமைச்சுக்களுக்கோ அல்லது திணைக்களங்களுக்கோ அனுப்பப்படாமல் வைப்புப் கணக்கில் இடப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரசநிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக திட்டமிடல் மற்றும் வெளிப்படுத்தப்பட்ட ஏனைய திட்டமிடல் அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாவட்டச் செயலகம் மற்றும் 15 பிரதேச செயலகங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய 408 கம்பெரலிய செயற்திட்டங்களில 404 செயல்திட்டங்கள் மாத்திரமே மீளாய்வாண்டினுள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன. இத்திட்டங்களிற்காக ரூபா 394.82 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகள் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதியேற்பாடுகளில் ரூபா 389.35 மில்லியன் கூட்டுதொகை பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் 5.47 மில்லியன் சேமிப்பு காணப்பட்டிருந்தன. | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் | வருட இறுதிப்பகுதியில் மேற்படி நிதியொதுக்கீடு கிடைக்கப்பெற்றதால் வேலைத்திட்டங்களை உரிய முறையில் கேள்வி நடைமுறைகளுக்கு அமைய செயற்படுத்துவதில் போதிய கால அவகாசம் இல்லாததினால் நிதியொதுக்கீடு மீளவும் அமைச்சிற்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது. |

### 3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வலிகாமம் தென் மேற்கு பிரதேச செயலகத்தில் ரூபா 18.763 மில்லியன் பெறுமதியான மானிப்பாய் சந்தைக் கட்டட கடைத்தொகுதியும் மலசலகூடமும் அமைக்கப்பட்ட பொழுதிலும் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாததுடன் | சந்தைக் கடைத்தொகுதியை வியாபாரிகளுக்கு குத்தகைக்கு விடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | கடைகளை வாடகைக்கு விடுவது மற்றும் வினைத்திறனாக கட்டடத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் மானிப்பாய் பிரதேச சபையால் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | சட்டவிரோதமான முறையில் இளைஞர்களின் களியாட்டங்களிற்கு பயன்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் இக்கடைத்தொகுதியை குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் கடந்த 10 மாதங்களாக பயன்பாடற்ற நிலையில் வைத்திருப்பதால் எதிர்பார்க்கப்பட்ட வருமானமான ரூபா 500,000 ஐ பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | | மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் ரூபா10 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட மரக்கறிச் சந்தை கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக பயன்பாடற்ற நிலையில் உள்ளது. இதனால் எதிர்பார்க்கப்பட்ட வருமானமான ரூபா 350,000 ஐ பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | மரக்கறிச் சந்தையை வியாபாரிகளுக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | குடைகளை வாடகைக்கு விடுவது மற்றும் வினைத்திறனாக கட்டடத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் மானிப்பாய் பிரதேச சபையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (இ) | மாவட்ட செயலக புதிய நிர்வாக கட்டடத் தொகுதியில் ரூபா 4.56 மில்லியன் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட மின் உயர்த்திக்கு வருடாந்த பராமரிப்பு சேவைக்காக ரூபா 207,000 செலவிடப்பட்டுள்ள போதிலும் பராமரிப்பு சேவை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பராமரிப்பு சேவை நடைபெறாமையால் அடிக்கடி பழுதடைந்து 02 மாதத்திற்கு மேலாக பாவனையற்ற நிலையில் காணப்படுகின்றது. இதனால் அலுவலர்களும் பொது மக்களும் எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. | பராமரிப்பு ஒப்பந்த நிபந்தனையின் படி சேவை வழங்குனரிடமிருந்து வினைத்திறனான சேவையைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | அடிக்கடி பழுதடைவதற்கு ஏதுவான சில அடிப்படையான காரணிகள் மேற்படி நிறுவனத்தால் இனங்காணப்பட்டு எமக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி காரணிகளைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் சிறப்பாக மேற்படி மின்உயர்த்தி செயற்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களின் காலதாமதமாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. விபரம் வருமாறு | | |
| (i) நீர்வேலி வாழைக்குலை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க கட்டட நிர்மாணமும் வாழைப்பழ உற்பத்தி நிலையம் அமைத்தலும் வேலைக்காக ரூபா 10,223,189 செலவிடப்பட்டிருந்ததுடன் வேலைகள் யாவும் 31 திசெம்பர் 2018 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 31 யூலை 2019 வரை அவை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை | வேலைத் திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | செயற்றிட்டத்திற்கான இயந்திரம் மற்றும் பொறித்தொகுதி வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து கிடைக்கப் பெற்றுள்ளது. இயந்திரம் நிலைப்படுத்தப்பட்டு அதன் தொழில்நுட்ப அறிக்கை கிடைக்கப்பெற்ற தன் பின்னர் தொடர் நடவடிக்கை எம்மால் மேற்கொள்ளப்படும். |
| (ii) கோண்டாவில் மின்தறி கட்டட புனர்நிர்மாணம் புதிய நெசவு இயந்திரங்களிற்கான கொள்வனவுக்காகவும் ரூபா 14,009,992 செலவிடப்பட்டிருந்ததுடன் வேலைகள் 31 திசெம்பர் 2018 அன்றோ அல்லது அதற்கு முன்னரோவோ முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 31 யூலை 2019 அவை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை | வேலைத்திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | செயற்றிட்டத்திற்கான இயந்திரம் மற்றும் பொறித்தொகுதி வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்படி இயந்திரம் நிலைப்படுத்தப்பட்டு அதன் தொழில்நுட்ப அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் தொடர் நடவடிக்கை எம்மால் மேற்கொள்ளப்படும் |
| (iii) பனங்கள் உற்பத்திக்கு தேவையான ஐந்து வகையான உபகரணங்கள் கொள்வனவுக்காக ரூபா 5,521,610 செலவிடப்பட்டிருந்ததுடன் | வேலைத்திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எமது கோரிக்கைக்கமைய பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட பின் எம்மால் தொடர் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் 31 திசெம்பர் 2018 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 30 யூன் 2019 வரை அவை வழங்குனரால் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | | மேற்கொள்ளப்படும் |
| (iv) | யா/சென்திரோசா மகளிர் கல்லூரி வகுப்பறைக் கட்டட நிர்மாணத்திற்காக ரூபா 10,947,000 செலவிடப்பட்டிருந்ததுடன் வேலைகள் யாவும் 18 பெப்ரவரி 2019 அன்றோ அதற்கு முன்னரோ முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 30 யூன் 2019 வரை அவை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை | வேலைத்திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும | எமது கோரிக்கைக்கு அமைய பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட பின் எம்மால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ) | வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் மானிப்பாய் சந்தை கடைத்தொகுதி (20 கடைகள்) அமைப்பதற்காக ரூபா 18.763 மில்லியன் செலவிடப்பட்டுளள்து. இச் செயற்திட்டம் 23 திசெம்பர் 2017 இல் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 18 மே 2018 அன்றே அதாவது 145 நாட்கள் தாமதித்தே நிறைவு செய்யப்பட்டுளள்து. இது தொடர்பில் காலதாமத்திற்கான தண்டப்பணம் ரூபா 1.09 மில்லியன் ஒப்பந்த உடன்படிக்கையின் பந்தி இல. 6.4 இன் படி ஒப்பந்தகாரரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வேலைத்திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | காலதாமத்திற்கான கட்டணங்களை ஒப்பந்தகாரரிடமிருந்து பெற்றுக்கொள்ள நவடிக்கை எடுத்துள்ளது. |
| (இ) | நல்லூர் பிரதேச செயலகத்தின் நிர்வாகக் கட்டடத்தொகுதி நிர்மாணம் கட்டம் ஒன்றிற்கென ரூபா 16.55 மில்லியன் நிதி கட்டடங்கள் திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இச் செயற்திட்டம் 31 யூலை 2018 இல் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 21 ஒக்டோபர் 2018 வரை 60 சதவீத வேலைகள் மட்டுமே | வேலைத்திட்டங்களை உரிய காலத்தில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | காலதாமத்திற்கான கட்டணங்களை மேற்படி ஒப்பந்தகாரரிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. |

ஒப்பந்தகாரரால் நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில் மாவட்டச் செயலக நிர்வாகத்தால் 21 ஒக்டோபர் 2018 அன்றுடன் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டுள்ளது. அது தொடர்பில் 03 மாத காலதாமதத்திற்கான தண்டப்பணம் ரூபா 1.65 மில்லியன் ஒப்பந்த உடன்படிக்கையின் பந்தி 4.9.1 இன் பிரகாரம் ஒப்பந்தகாரரிடமிருந்து அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பெறுகைகள்

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மாவட்ட செயலாளர் காரியாலயத்திற்கு மீளாய்வாண்டின் போது கொள்வனவு செயற்பாட்டின் மூலம் வழங்கல்களையும் சேவைகளையும் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 88.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 88.5 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது.<br><br>ஒதுக்கப்பட்டிருந்த நிதி தொடர்பாக தயாரிக்கப்பட வேண்டிய கொள்வனவு திட்டம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.<br><br>**கொள்வனவு திட்டங்கள் மற்றும் ஆரம்ப நிலை**<br>இந்தக் கட்டத்தின் **கீழ்** வரும் செயற்திட்டங்கள் மற்றும் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(i) பிரதான கொள்வனவுத் திட்டம்<br>(ii) கொள்வனவுப் பொதியின் சுருக்கம் | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு இணைக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | தங்களின் அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டலின் அடிப்படையில் கொள்வனவுப் பொதியின் சுருக்கம், ஆரம்ப பெறுகைத் திட்டம் என்பன 2018 இலிருந்து பேணப்படுகிறது |

| | | |
|---|---|---|
| (iii) ஆரம்பக் கொள்வனவுத்திட்டம் | | |
| (iv) இனங்காணப்பட்ட கொள்வனவுடன் தொடர்பான விசேட அனுமதியைப் பெறுவதற்குத தேவையானஆவணங்கள் | | |
| (v) விதந்துரைப்புகள், திட்டமிடல், அடிக்குறிப்புகள், நிர்மாணங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தி | | |
| (ஆ) ஒப்பந்தத்திற்கு முன்னரான கட்டம்<br><br>இக் கட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பான அவதானிப்புக்கள்<br><br>(i) ஒவ்வொரு ஒப்பந்த தொகுதி மற்றும் கொள்வனவுக்கால உப அட்டவணைகள் (கொ.கா.அ)<br><br>(ii) வேலை,பொருட்கள் மற்றும் சேவை விரிவான கொள்வனவுத் திட்டம்<br><br>(iii) மதியுரை சேவைகளுக்கான விரிவான கொள்வனவுத் திட்டம் மேற்கூறியவாறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு இணைக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | சில ஆவணங்களைத் தயாரித்தலுக்கான தேவைப்பாடுகள் மற்றும் சூழ்நிலைகள் தோன்றாத காரணத்தினால் அவை தயாரிக்கப்படவில்லை. எனினும் 2018 ஆம் ஆண்டிலிருந்து அவற்றைப் பேண எம்மால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) ஒப்பந்தத்தின் பின்னரான (ஒப்பந்த நிர்வாக) கட்டம்<br><br>இக்கட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பான அவதானிப்புக்கள். | பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு இணைக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட | ஒவ்வொரு பெறுவனவுக்கு பின்னைய கட்டத்திலும் எம்மால் சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களும் கொடுப்பனவினை மேற்கொள்ளும் பொருட்டு தயாரிக்கப்படுகின்றன. எனினும் சில |

| | | |
|---|---|---|
| (i) ஒப்பந்த நிர்வாகத்திட்டம் (ஒ.நி)<br><br>(ii)ஒப்பந்த நிர்வாகத்திட்டத்துடன் இணைந்த காசுப்பாய்ச்சல் திட்டம் மேற்கூறியவாறு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும் | ஆவணங்களைத் தயாரித்தலுக்கான தேவைப்பாடுகள் மற்றும் சூழ்நிலைகள் தோன்றாத காரணத்தினால் அவை தயாரிக்கப்படவில்லை. எனினும் 2018 ஆம் ஆண்டிலிருந்து அவற்றைப் பேண எம்மால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் பயன்படுத்தப்படாமலும் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தன. விபரம் வருமாறு | முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | மேட்டார் சைக்கிள்களின் உரிமை மாகாண சபைக்குரியதாகும். இவற்றை உடமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மாவட்டச் செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 06 கடற்கலங்கள் தற்போது பிரதேச சபை வேலணைக்கு கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது<br><br>150 உயிர்காப்பு அங்கிகள் குறைப்பாவனையுடையதாக காணப்பட்டது. தற்போது பிரதேச சபை வேலணைக்கு கையளிப்புச் செய்யப்பட்டுள்ளது. |

| சொத்துவகை | கூறுகளின் எணணிக்கை | பெறுமதி | குறைவாகப் பயனப்டுத்தப்பட்ட காலம் |
|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | வருடங்கள் |
| கட்டிடங்கள் | 02 | 8.50 | 2 – 6 |
| மோட்டார் சைக்கிள்கள் | 11 | 8.69 | 2 – 8 |
| கடற்கலங்கள் | 06 | 1.24 | 2 – 4 |
| உயிர்காப்பு அங்கிகள் | 150 | 0.44 | 2 |

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கம்பெரலிய கிராம அபிவிருத்தி | வேலைகளுக்கான | மேற்படி செயற்றிட்டத்தை |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீதி புனர் நிர்மாண வேலைக்கான அடித்தளத்திற்கு கட்டட இடிபாடுகள் அந்த பிரதேசத்தில் காணப்படுகின்ற போதிலும் அதற்குப் பதிலாக Aggregate Base Course (ABC) என்ற மூலப்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளமையால் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட 02 வீதி வேலைகளுக்கான கூட்டுமொத்தம் ரூபா 466,000 மேலதிகமாக மதிப்பிடப்பட்டிருந்தன. | மதிப்பீடுகள் தயாரிக்கும் போது சிக்கனத்தன்மை கருத்தில் கொள்ளப்பட வேண்டும். | நிறைவேற்றிய செயற்றிட்ட அமுல்படுத்துனரிடமிருந்து விளக்கம் கோரப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மிக விரைவில் எடுக்கப்படவுள்ளது. |
| (ஆ) | மாவட்டச் செயலகத்தின் நுழைவாயிலுக்கு தானியங்கிகதவு பொருத்துவதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 1.28 மில்லியன் செலவிடப்பட்டுள்ள போதிலும் மேற்படி கதவு நாளதுவரை உரிய தேவைக்கு பயன்படுத்தப்படாதுள்ளது. | இவ்வாறான தேவையற்ற விடயங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மேற்படி அதிகரித்த மின்சாரச் செலவைக் கட்டுப்படுத்தும் விதமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்படி கதவு எம்மால் பாவிக்கப்பட்டு வருகின்றது. |

## 4 மனிதவள முகாமைத்துவம்

2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட உள்ளபடியான வெற்றிடமான மற்றும் மிகைப்பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்டநிலை | 77 | 67 | 10 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 64 | 22 | 43 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 1721 | 1644 | 82 | 05 |
| (iv) | ஆரம்பநிலை | 211 | 175 | 40 | 04 |
| | **மொத்தம்** | **2,073** | **1,808** | **175** | **10** |

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் 175 வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை பொருத்தமானவாறு நியமிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | அனுமதிக்கப்பட்ட ஆளணியின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | வெற்றிடம் தொடர்பாக எமது விசேட அவதானிப்பையும் வெளிப்படுத்தி வருகின்றோம். எனினும், இது வரை சம்பந்தப்பட்ட அமைச்சினால் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் ஆரம்ப, இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட அலுவலர்களில் காணப்பட்ட 10 மிகை ஆளணியினரை தேவையான இடங்களுக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். | தற்போது யாழ் மாவட்டத்தில் ஒட்டுமொத்த ரீதியில் நோக்கும் போது வெற்றிடங்களே காணப்படுகின்றது. எனினும், மாவட்டச் செயலகம், மற்றும் பிரதேச செயலகங்களை தனித்தனியாக நோக்கும் போது மிகைகள் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.<br><br>-மாவட்டத்தின் இணையத்தளம் மற்றும் வலைத்தள அடிப்படையில் மென்பொதி உருவாக்கத்திற்காக ஒரு தகவல் தொழில்நுட்ப உதவியாளரின் வெற்றிடம் தகவல் தொழில்நுட்ப அலுவலரின் பதவியினால் சீர்செய்யப்பட்டுள்ளது.<br><br>-03 முகாமைத்துவ உதவியாளர்களுக்கான மிகை தற்போது சீர் செய்யப்பட்டுள்ளது. (இருவர் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார்கள் மற்றும் ஒருவர் மரணமடைந்துள்ளார்.<br><br>-02 எண்ணிக்கையான எழுதுநர்கள் மற்றும் 04 எண்ணிக்கையான அலுவலகப் பணியாளர் பதவி“Personal to Holder”என்ற அடிப்படையில் தொடர்ச்சியாக அவர்களின் ஓய்வுகாலம் வரை பணியாற்றுவது தவிர்க்க முடியாதொன்றாகவுள்ளது.<br><br>எவ்வாறெனினும் மேற்படி விடயங்கள் 2020 ஆண்டு இடமாற்றத்தின் போது சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |